20.03.2023

**வா.சா. 1**

**திருமதி இந்திரா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (4-ம் பிரதிவாதி தரப்பில்)**

நானும் சொக்கலிங்கமும் சேர்ந்து 4-ம் பிரதிவாதி நிறுவனத்தில் அடமான கடன் பெற்றிருந்தோமா என்றால் சொக்கலிங்கம் வாங்கியிருந்தார், நான் உத்திரவாத கையெழுத்து போட்டிருந்தேன். சொக்கலிங்கம் என் வீட்டுக்காரருக்கு குடும்ப நண்பர். 1 முதல் 3 பிரதிவாதிகள் சொக்கலிங்கத்தின் மனைவி மற்றும் குழந்தைகள். சொக்கலிங்கம் பெற்ற கடனுக்கு நான் ஜாமீன் கொடுத்து திருத்துறைப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 712/2018 ஆக MOD ஆக பதிவாகியுள்ளது என்றால்

சரிதான். அந்த கடனை திரும்ப செலுத்தும் கால அளவு 36 மாதங்கள் என்றால் சரிதான். சொக்கலிங்கம் அந்த கடனில் ரூ.5,02,092/- தான் கட்டியுள்ளார் என்றால் அவர் கூடுதலாகத்தான் கட்டியுள்ளார். சொக்கலிங்கம் கூடுதலாக தொகை கட்டியதற்கான ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அந்த ஆதாரங்கள் ஸ்ரீராம் பைனான்சில்தான் உள்ளது, என்னிடம் இல்லை. நான் ஜாமீன் போட்ட வகையில் சொக்கலிங்கம் இறந்து விட்டதால் சொக்கலிங்கத்தின் வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகளும் ஜாமீன்தாரரான நானும் ரூ.92,81,558/- தொகை 4-ம் பிரதிவாதிக்கு தர வேண்டியுள்ளது என்றால் தாவா தாக்கல் செய்த தேதி வரை உள்ள பாக்கி தொகையான ரூ.36,23,853/- தொகையை நான் செலுத்த தயாராக உள்ளேன். கடனுக்கு ஜாமீன் கொடுத்துள்ளதால் 4-ம் பிரதிவாதிக்கு தொகையை முழுவதும் செலுத்த நான் கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த தேதியில் எவ்வளவு தொகை பாக்கியுள்ளதோ அதை செலுத்த தயாராக உள்ளேன். கடனை தீர்வு செய்து விட்டால் சொத்தில் பற்றுகையை சார் பதிவாளர் அலுவலகத்தில் நீக்கரவு செய்ய 4-ம் பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இதர பரிகாரங்களுக்கும்

4-ம் பிரதிவாதிக்கும் சம்மந்தமில்லை என்றும் 4-ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI

Digitally signed by M SHANTHI
DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.03.20 17:05:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.